அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.16/2016

தேதி.14.1.2016

## ஜல்லிக்கட்டு இல்லாத பொங்கல் பண்டிகை இனிப்பில்லாத சர்க்கரைப்பொங்கல் போல் ஆகும்

## ச ம க நிறுவனர் - தலைவர் *ஆர்.சரத்குமார்* எம்.எல்.ஏ

## *பொங்கல் வாழ்த்து*

ஜல்லிக்கட்டு இல்லாத பொங்கல் பண்டிகை இனிப்பில்லாத சர்க்கரைப்பொங்கல் போல் ஆகும். இருப்பினும், தமிழ் திங்களாகிய தைத்திங்கள், தமிழர்தம் வாழ்வோடு இணைந்த பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தமிழ்கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தக் கூடிய பொங்கல் திருநாள், உழவுக்கும், உழவனுக்கும் உறுதுணையாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் மாடுகளுக்கு மரியாதை செய்யும் திருநாள், திசை எட்டும் தமிழன் பெருமையைப் பறைசாற்றும் திருக்குரளைத் தந்த திருவள்ளுவரைப் போற்றும் திருநாள் என மூன்று முத்தாய்ப்பான திருநாள்களுடன் இனிதே மலர்கிறது.

இத்திருநாள் உலகெங்கும் வாழும் தமிழர்களின் அடையாளத்தை பறைசாற்றும் திருநாள். லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நாகரீகத்தின் சிகரமாகத் திகழ்ந்தது தமிழர் நாகரீகம் என்பது நமது பெருமைக்குரிய வரலாறு. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழினம், இந்நன்னாளில் மீண்டும் தமது நாகரீக கலாச்சார பண்பாட்டு மரபுகளை மீண்டும் இவ்வுலகிற்கு எடுத்துரைக்கும் விதமாக இத்திருநாள் அமையவேண்டும். தமிழனுக்குரிய அடையாளங்களை நாம் என்றுமே இழந்துவிடக்கூடாது. தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு தொடர்ந்து நடைபெறச் செய்திட நாம் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும். இடையில் ஏற்பட்ட தடைகளை தகர்த்திட வேண்டும்.

இந்த இனிய விழாக்களின் கொண்டாட்டங்கள் மூலமாக மகிழ்ச்சியையும், குதூகலத்தையும் வெளிப்படுத்தினாலும், சமத்துவமும் சகோதரத்துவமும் நிலைத்து நீடித்து நிற்க தமிழர்கள் அனைவரும் உறுதி ஏற்போம். இப்பிரார்த்தனையோடு உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் என் சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்